**இலங்கை மாநாட்டுப் பணியகம் - 2023**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இலங்கை மாநாட்டுப் பணியகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இலங்கை மாநாட்டுப் பணியகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பணியகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பணியகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பணியகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பணியகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு பணியகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பணியகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பணியகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி

வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பணியகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பணியகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பணியகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பணியகம் இணங்கியிருந்ததா என்பதும்,

- பணியகம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- பணியகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலாத்துறைச் சட்டத்தின் VIII ஆம் அத்தியாயத்தின் 42 ஆம் பந்தியின் (ஆ), (உ) மற்றும் (ஏ) உபபிரிவு | சுற்றுலாத் துறையில் ஒரு இடமாக இலங்கையின் சந்தைப்படுத்தலை உறுதிப்படுத்துவதற்கு வடிவமைக்கப்பட்ட பொதுவான கொள்கையொன்றை வழங்குதல், மாநாடுகள், கூட்டங்கள், கண்காட்சிகள் போன்றவற்றைக் கையாள்வதில் ஈடுபட்டுள்ள நபர்கள் அல்லது நிறுவனங்களுக்கு தொழில்சார் நியமங்களை பரிந்துரைத்தல் மற்றும் இலங்கையை ஒரு | சர்வதேச, பிராந்திய மற்றும் உள்நாட்டு மாநாடுகள், கூட்டங்கள், கண்காட்சிகள் மற்றும் ஊக்கமளிக்கும் பயணங்களுக்கான இடமாக இலங்கையின் ஒருங்கிணைந்த மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் சந்தைப்படுத்தலை உறுதிசெய்வதற்கு வடிவமைக்கப்பட்ட ஒருங்கிணைந்த கொள்கையை | இலங்கையை ஒரு சுற்றுலா தலமாக மேம்படுத்துவதற்கு ஊக்குவிப்பு பணியகத்திற்கு வழிகாட்டுதல் களை வழங்குதல். |

| | | |
|---|---|---|
| | சுற்றுலாத் தலமாக மேம்படுத்துவதற்கு ஊக்குவிப்பு பணியகத்திற்கு வழிகாட்டலை வழங்குதல் ஆகிய பணியகத்தின் நோக்கங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரை நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. | உருவாக்குவதற்கான ஒரு தொடர் முயற்சி நடைபெற்று வருகின்றது. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 36,103,317 மிகையொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 95,382,436 ஆக காணப்பட்டது. அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 59,279,119 தொகையான பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. திறைசேரிக்கு வழங்கப்பட்ட பங்களிப்பு ரூபா 20,000,000 ஆல் மற்றும் சந்தைப்படுத்தல் செலவினம் ரூபா 173,957,668 ஆல் அதிகரித்தமை இப்பின்னடைவிற்கு பிரதான காரணங்களாக காணப்பட்டன.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பணியகத்தின் அலுவலகத்திற்கான குத்தகை ஒப்பந்தம் 2022 திசெம்பர் 17 ஆம் திகதி காலாவதியானது. எனினும், இந்த வருடத்திலும் குத்தகை ஒப்பந்தம் புதுப்பிக்கப்படாததுடன் தலா ரூபா 151,250 வீதம் மூன்று மாத தவணைகள் மற்றும் ரூபா 267,000 வீதம் ஏழு மாத தவணைகள் என மொத்தம் ரூபா 2,322,750 மீளாய்வாண்டில் முறையான அங்கீகாரமின்றி செலுத்தப்பட்டிருந்தது. | இரண்டு ஆண்டுகளுக்கு (2022 மற்றும் 2023) வாடகை ஒப்பந்தத்துடன் புதுப்பித்தல் கோரிக்கையை SLITHM சமர்ப்பித்திருந்தது. மாதாந்த வாடகை ரூபா 110,000 இலிருந்து ரூபா 267,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இதில் மாதாந்த மின்சாரம் மற்றும் இதர வசதிகளுககான ரூபா 42,000 அடங்கியுள்ளது. SLCB இந்த உயர்த்தப்பட்ட வாடகை தொடர்பான சபை பத்திரத்தை சமர்ப்பித்துள்ளதுடன் மற்றும் காணியின் உரிமை SLTDA இற்கு இருப்பதால் SLCB இனால் ஒப்பந்தத்தில் கையெழுத்திட முடியவில்லை என்று விளக்கமளித்துள்ளது. எனவே, காணி உரிமையாளர்களின் அனுமதியின்றி ஒப்பந்தமொன்றை ஏற்படுத்துவதற்கு SLITHM இற்கு அதிகாரம் உள்ளதா என்பது கேள்விக்குறியாக உள்ளது. எனவே, | காணி விவகாரம் தெளிவு படுத்தப்பட வேண்டியதுடன் பணியகம் ஒப்பந்தமொன்றை ஏற்படுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கு முன், மேற்கூறியவை குறித்து சபையிடமிருந்து SLCB விளக்கம் கோருகின்றது. | |

**3.2 சர்ச்சைத்தன்மையான கொடுக்கல் வாங்கல்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| போட்டி ஏல முறையின் மூலம் விலைமனுக்களை அழைப்பதற்கான வாய்ப்புக்கள் இருந்த போதிலும், பணியகத்தின் முகவரியின் கீழ் பதிவுசெய்யப்பட்ட இலங்கை தொழில்சார் மாநாட்டு கண்காட்சி மற்றும் நிகழ்வு ஏற்பாட்டாளர்கள் சங்கம் (SLAPCEO) மாத்திரமே இலங்கையில் MICE ஐ நிகழ்த்தக்கூடிய ஒரேயொரு தொழில்முறை அமைப்பாகுமென குறிப்பிட்டு பணியகம் முறையான பெறுகை செயல்முறையை மீறி செயல்பட்டிருந்தமை கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டதுடன் மீளாய்வாண்டின்போது நடாத்தப்பட்ட MICE எக்ஸ்போ கொழும்பு அவர்களுக்கு ரூபா 48,084,013 செலவில் வழங்கப்பட்டிருந்தது. | SLAPCEO என்பது பணியகத்தின் ஒரு சுயாதீனமான தனியார் சங்கமாகும். அவர்களது முகவரியை மாற்றிக்கொள்ளுமாறு உத்தியோகபூர்வ கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளது. | கொடுக்கல் வாங்கல்களில் முரண்பாட்டைத் தவிர்ப்பதற்கும் முறைகேடுகளைத் தவிர்ப்பதற்கும் முடிந்தவரை போட்டி ஏல முறைகளுக்கு செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.3 ஏனைய நிறுவனங்களின் வளங்களைப் பயன்படுத்தல்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டின்போது விபத்தொன்றில் சிக்கிய சுற்றுலா அமைச்சிற்குச் சொந்தமான ஜீப்பொன்றை பழுதுபார்க்கும் செலவிற்காக காப்பீட்டு நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட இழப்பீட்டிற்கு மேலதிகமாக பணியகத்தினால் 2023 நவம்பர் 23 இல் ரூபா 11,516,808 செலுத்தப்பட வேண்டி இருந்தது. பணியகத்திற்கு குறிப்பிட்ட வாகனத்தை கையகப்படுத்தியதன் அடிப்படையில் இந்த முடிவு எடுக்கப்பட்டது, ஆனால் இது தொடர்பாக முன் ஒப்பந்தம் அல்லது கிரயப் பயன் பகுப்பாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், இவ்விடயம் தொடர்பில் இரு தரப்பினருக்குமிடையே இதுவரை சரியான உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்படவில்லை எனவும் அமைச்சின் செயலாளரின் | ஆரம்பத்திலிருந்தே, முந்தைய SLCB தலைவர் ஒதுக்கப்பட்ட உத்தியோகபூர்வ வாகனமொன்று கிடைக்காமையால் கொடுப்பனவுகளைத் தேர்ந்தெடுத்தார். தலைவர் அவரது உரிமையைக் கோரியிருந்ததுடன் வாகனமொன்றை கொள்வனவு செய்வதற்கு எவ்வித ஏற்பாடுகளும் இருக்கவில்லை. எனவே, வாகனத்தின் இருப்பு குறித்து அமைச்சு தெரிவிததிருந்ததுடன் நிலுவையில் உள்ள பழுதுபார்ப்பு செலவுகளை தீர்க்குமாறு கேட்டுக் கொண்டது. அதற்குப் பதிலாக | ஏனைய நிறுவனங்களின் சொத்துக்கள் நிதி ரீதியாக தகுதியானதாக இருந்தாலும் அதைப் பயன்படுத்துவதைத் தவிப்பதற்கு பணியகத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| MT/ADM/01/22/2021/CAU-4004 ஆம் இலக்க 2024 பெப்ரவரி 27 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் குறிப்பிட்ட ஜீப் 05 வருட காலத்திற்கு பணியகத்தின் பயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்டிருந்தது. | வாகனம் ஐந்து ஆண்டுகளுக்கு ஒதுக்கப்படும். பணியகம் ரூபா 11.5 மில்லியன் நிலுவைத் தொகையை செலுத்தி வாகனத்தைப் பெற்றுக் கொண்டது.<br><br>ரூபா 11.5 மில்லியன் செலுத்தி 5 ஆண்டுகளுக்கு வாகனத்தைப் பெற்றமை SLCB இற்கு நிதி ரீதியாகப் பலனளித்ததுடன், கிரயப் பயன் பகுப்பாய்வின் பிரகாரம் இதனால் அண்ணளவாக ரூபா 483,192/- SLCB இற்கு சேமிக்கப்படும். கிரயப் பயன் பகுப்பாய்வின்படி, செயற்பாட்டு குத்தகை அடிப்படையில் SLCB தலைவருக்காக 5 வருட காலத்திற்கு வாகனத்தைப் பெற்றிருந்தால், பணியகத்தினால் பொறுப்பேற்க வேண்டிய செலவு குறைந்தபட்சம் (மாதாந்தம் 200,000 x 5 ஆண்டுகள்) ரூபா 12 மில்லியன் ஆகும். செயற்பாட்டு குத்தகை வாகனத்திற்காக திறைசேரியால் அங்கீகரிக்கப் பட்ட அதிகபட்ச மாதாந்த வாடகை ரூபா 200,000/- மற்றும் செயற்பாட்டு குத்தகை வாகனத்தின் தற்போதைய சந்தை விலை மாதமொன்றுக்கு ரூபா 250,000/- ஆகும். ரூபா 250,000/-, ஆக இருப்பதால் திறைசேரியால் வழங்கப்பட்ட விவரக்குறிப்புகளின் பிரகாரம் சந்தையில் வாகனங்கள் இல்லை.<br>எனவே, 5 வருட காலத்திற்கு ரூபா 11.5 மில்லியனுக்கு வாகனத்தைப் பெறுவது நிதி ரீதியாக தகுதியானது. | |

**3.4 மனித வள முகாமைத்தவம்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆம் திகதிய பொது முயற்சிகளுக்கான செயல்வழிக் கையேட்டின் | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் (DMS) | பதிலீட்டு திட்டமொன்று பணியகத்திற்கு |

| | | |
|---|---|---|
| (SOE) 3.4 ஆம் பந்திக்கமைய அனைத்து பொது முயற்சிகளுக்கும் பதிலீட்டு திட்டமொன்று காணப்பட வேண்டும். எவ்வாறாயினும், பணியகத்தினால் இதுவரையிலும் பதிலீட்டு திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட SLCB ஆட்சேர்ப்புத் திட்டத்தின் (SOR) பிரகாரம் அனைத்து ஆட்சேர்ப்பு மற்றும் வெற்றிடங்களை நிரப்புதல் என்பன முறையான நேர்முகப்பரீட்சை செயல்முறையுடன் செய்தித்தாள் விளம்பரம் மூலம் பொது மக்களிடமிருந்து விண்ணப்பங்களை அழைப்பதன் மூலம் செய்யப்படுகிறது. எனவே, பதிலீட்டு திட்டமொன்றை பணியகத்தில் செயற்படுத்த முடியாது. | தயாரிக்கப்பட வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 கூட்டிணைந்த திட்டம்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆந் திகதிய பொது முயற்சிகளின் நல்லாளுகைக்கான வழிகாட்டியின் 2.3 ஆம் பந்திக்கமைய, ஐந்து வருடங்களுக்கு மூலோபாயத் திட்டம் தயாரிக்கப்பட்டு திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். மேலும், வியாபார மாற்றங்களுக்கு ஏற்ற வகையில் ஒவ்வொரு வருடமும் திட்டம் நாளதுவரையாக்கப்பட வேண்டியதுடன், அதற்கடுத்த வருடம் ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன்னர் பொது திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும் , பணியகத்திற்கான மூலோபாயத் திட்டமொன்று 2020-2023 எனும் நான்கு வருட காலப்பகுதிக்காக தயாரிக்கப்பட்டிருந்ததுடன், இது இதுவரையிலும் நாளதுவரையாக்கப்படவில்லை | SLCB இனால் அடுத்துவரும் ஐந்து வருடங்களுக்கான மூலோபாயத் திட்டத்தை தயாரிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன், வியாபார மாற்றங்களுக்கு ஏற்ற வகையில் ஒவ்வொரு வருடமும் திட்டம் நாளதுவரையாக்கப்படும். | ஐந்து வருடங்களுக்கு மூலோபாயத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும் என்பதுடன், ஒவ்வொரு வருடமும் நாளதுவரையாக்கப் பட்டு திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் |